**இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை - 2023**

-----------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1930 இன் 10 ஆம் இலக்க இறப்பர் ஆராய்ச்சி கட்டளைச்சட்டம், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தாயரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பின்வரும் அவதானிப்புக்கள் காரணமாக காசுப்பாய்ச்சல் கூற்று இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02 உடன் இணங்கவில்லை. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் ரூபா 1,100,959 ஐக் குறைத்து காட்டியதன் மூலம் ரூபா 5,320,211 ஆக மீளாய்வாண்டில் முதலீடுகளின் மீது பெறப்பட்ட ரூபா 6,421,170 வட்டியை சீராக்கம் செய்யப்படுதல். | 2023 ஆம் ஆண்டில் பெறப்பட்ட வட்டி வருமானத்துக்குள் முன்னைய ஆண்டின் பெறவேண்டிய வட்டி மற்றும் அறவிடமுடியாக்கடன்களுக்கான ஏற்பாட்டு கணக்குகளிற்கு ரூபா 222,977 உரிய தொகை கொண்டுவரப்பட்டதால், உரிய மீதிகளில் இருந்து கழிக்கப்பட்டு காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | ஆண்டின் போது ஈட்டிய மொத்த வட்டி காசுப்பாய்ச்சல் கூற்றில் சீர்செய்யப்பட வேண்டும். |
| (ii) | காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன சீராக்கத்தில் குறைவாக உள்ள ரூபா 619,963 தொகையான ஏனைய நடைமுறை சொத்துக்களில் உள்ள வேறுபாட்டை சீராக்கம்செய்தல். | -மேற்படி- | காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது, தொழிற்படு மூலதன மாற்றங்கள் சரியாக சீர்செய்யப்பட வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டில் 03 வாகனங்களின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட ரூபா 3,788,101 தொகையை காசுப்பாய்ச்சல் கூற்றில் பெறுவனவுகளாக சீராக்கம் செய்யத் தவறியுள்ளது. | எதிர்காலத்தில் இந்த கொடுக்கல்வாங்கல்களுக்கு கணக்கீடு செய்யும் போது காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல்களை காசுப்பாய்ச்சல் கூற்றில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வாகனங்களின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட தொகையானது காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு உட்பாய்ச்சல் ஒன்றாக சீர்செய்யப்பட வேண்டும். |
| (iv) | 2023 ஆம் ஆண்டில் நடைமுறை அல்லாத சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக சபையால் செலுத்தப்பட்ட ரூபா 74,307,668 தொகை காசுப்பாய்சசல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் ரூபா 95,266,009 ஆக சீர்செய்யப்பட்டிருந்தது, முதலீட்டு நடவடிக்கைகளின் மூலம் பெறப்பட்ட தொகை ரூபா 20,958,341 ஆல் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது. | ஆண்டின் போது புதிதாக சேர்க்கப்பட்ட சொத்துக்களாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பதிவேட்டின் பிரகாரம் புதிய சொத்துகளின் பெறுமதிக்காக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததால், அப் பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் பணம் காசுப்பாய்ச்சல் கூற்றில் சரியாக சீர்செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் 09 இன் 15 ஆம் பந்தியின் | சபையின் இறப்பர் இருப்புக்களின் உற்பத்திக்காக ஏற்படும் செலவினங்கள் | இறுதி இருப்பின் பெறுமதி கணக்கீட்டு |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரமும் சபையின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கவும் இறுதிப் இருப்பின் பெறுமதி கிரயம் அல்லது தேறிய கைக்கிட்டிய பெறுமதி என்பவற்றில் குறைந்த பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டிய போதிலும் அத்தகைய கணிப்பீடு இல்லாமல் விற்கப்பட வேண்டிய இறப்பர் இருப்பு நிதிக்கூற்றுக்களில் ரூபா 10,989,087 சந்தை பெறுமதியல் குறிப்பிடப்பட்டிருந்தது. | தனித்தனியாக கணிப்பிடப்பட்டிருக்காததால் இறப்பர் இருப்பின் பெறுமதி சந்தை பெறுமதியில் காட்டப்பட்டுள்ளதுடன் இது 2024 ஆம் ஆண்டில் சீர்செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படும். | நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் கிரயம் அல்லது தேறிய கைக்கிட்டிய பெறுமதி என்பவற்றில் குறைந்த பெறுமதியில் காட்டப்பட வேண்டும். |
| (இ) | சபையின் ஊழியர்களின் பணிக்கொடை பெறுமதியை கணிப்பிடும் போது, இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் 19 இற்கு இணங்க யதார்த்தமான மதிப்பீட்டு முறை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை . | இங்கு யதார்த்தமான மதிப்பீட்டு முறையைப் பயன்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட யதார்த்தமான மதிப்பீட்டாளர் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்பதால் அதற்காக பெரும் செலவு செய்ய வேண்டியிருந்தது. எனவே, இது பற்றி ஆய்வு செய்து 2024 ஆம் ஆண்டு முதல் நியமத்தின் பிரகாரம் பணிக்கொடை பெறுமதியை கணிப்பிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் ஊழியரின் பணிக்கொடை பெறுமதியை கணிப்பிடுவதில் யதார்த்தமான மதிப்பீட்டு முறை பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | ரூபா 24,985,636 தொகையான தாங்குபவர் மற்றும் நுகர்வோர் உயிரியல் சொத்துக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் 18 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக அடையாளம் காணப்படாமல் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | 2024 ஆம் ஆண்டில் கணக்கீட்டு கூற்றுக்களில் தாங்குபவர் மற்றும் நுகர்வோர் உயிரியல் சொத்துக்களின் பெறுமதியை தனித்தனியாகக் காட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் உயிரியல் சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக குறிப்பிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | சபைக்குச் சொந்தமான டார்டன்பீல்ட் மற்றும் குருவிட்ட தோட்டங்களின் வருமானத்திலிருந்து ரூபா 11,000,000 தொகையை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் வருமானமாகக் கருதி சபையின் | இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் வருமானமாக தோட்டப் பிரிவுகளிலிருந்து பெறப்படும் வருமானத்திலிருந்து ரூபா 11 மில்லியனை பெற்றுக்கொள்வதற்காக 2023 ஆம் ஆண்டுக்கான பாதீடு | நிதிக்கூற்றுக்களில் வருமானம் மற்றும் செலவினங்கள் சரியாக குறிப்பிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவினங்களுக்காகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதால், இந்த பெறுமதி சபையின் நிதிக்கூற்றுக்களில் இரண்டு தடவை வருமானம் மற்றும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | மூலம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | |
| (ஊ) | இறப்பர் ஆராய்ச்சி சபைக்கு சொந்தமான ஐந்து ஏக்கர் காணியை கோருவதற்காக இரண்டு நபர்களால் சபைக்கு எதிராக கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தோட்டப் பிரிவினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதுடன், அதன் தகவல்கள் நிர்வாகப் பிரிவுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் சபை மற்றும் அதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் டயர் நிலையத்திற்கு 2021 ஆம் ஆண்டில் ரூபா 1,020,600 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட ”டம்பெல் டை இக்யூப்மென்ட்” (Dumbbell Die Equipment) நிதிச் செயலாற்றல் கூற்றிற்கு நுகர்பொருளாக சீராக்கப்பட்டதால், நிலையான சொத்துக்கள் அந்தத் தொகையால் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தன. | களஞ்சியத்தில் இருந்து GRN வழங்கும் போது கணக்குக் குறியீட்டு எண்கள் தவறாக உள்ளிடப்பட்டதால் நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படவில்லை. எனவே 2024 ஆம் ஆண்டில் திருத்தங்கள் செய்யப்படும். | கொள்வனவுகள் சரியாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டில் ரூபா 2,617,462 பெறுமதியான 03 மூலதனப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்கான பொறியியல் சான்றிதழ் வழங்கப்படாததால், இந்த மேம்பாட்டின் பெறுமதி 2023 ஆம் ஆண்டிலும் நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த ஒப்பந்தங்களின் பணிகள் 2023 ஆம் ஆண்டில் நிறைவடைந்ததாக வதிவிடப் பொறியாளர் தெரிவிக்காததால், 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் இது நடைமுறை வேலையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | பொறியியலாளரின் சான்றிதழின் அடிப்படையில் உடனடியாக நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்தவுடன் அந்த செலவுகள் மூலதனமாக்கப்பட வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|

நிதியைப் பெறுவதற்கு முன்னர் 5 ஆண்டுகளுக்கு மேலான பெறவேண்டிய

| | | |
|---|---|---|
| ஆராய்ச்சி அறிக்கைகள் வெளியிடப்பட்டதன் காரணமாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,017,114 கடன்பட்டோர் மீதி காட்டப்பட்டதுடன் 5 ஆண்டுகளிற்கு மேலாக உள்ள கடனிபட்டோர் மீதி ரூபா 33,398 ஆக உள்ளதுடன் 1 மற்றும் 2 ஆண்டுகளுக்கு இடையேயான கடன்பட்டோர் மீதி ரூபா 206,800 ஆக இருந்தது. | கடன்பட்டோர் மீதிகளில் ரூபா 12,822 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் மிகுதி ரூபா 20,575 ஆக உள்ளது. அந்த மீதிகளைத் தீர்ப்பதற்காக அமைப்பின் அடுத்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களில் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தொகையை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் விதிக்கோவை | | | |
| (i) | VII ஆம் அத்தியாயம் | திணைக்களத் தலைவர்களின் கடமைகளைச் செய்வதற்கு இரண்டு ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் 1/9 பங்கு விசேட படி செலுத்தப்பட்டது. | இது தொடர்பாக பணிப்பாளர் சபையிடம் மீண்டும் அறிக்கையிடப்பட்டு, சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான அறிவுறுத்தல்களின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட படிகள் மாத்திரமே செலுத்தப்பட வேண்டும். |
| (ii) | XII ஆம் அத்தியாயம் | இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு விசேட சந்தர்ப்பங்களில் ஓய்வு மற்றும் அமைய விடுமுறை தவிர, ஓய்வு மற்றும் சாதாரண விடுமுறைக்கு கூடுதலாக சுகவீன விடுமுறைக்கு உரித்தில்லாத போதிலும் ஒரு அரசாங்க உத்தியோகத்தரிற்கு ஒரு | தற்சமயம் பயன்படுத்தப்படும் நடைமுறை விதிகள் கையேட்டிற்கு நிறுவனம் அங்கீகாரம் பெறாததால், இந்தத் தகவல் அதற்கேற்ப கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களின் படி பணிப்பாளர் சபைக்கு தெரிவிக்கப்பட்டு, எதிர்காலத்தில் விடுமுறையுடன் கூடிய | தாபன விதிக்கோவையின் பிரகாரம் விடுமுறை அங்கீகரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வருடத்தில் 21 சாதாரண விடுமுறை மற்றும் 24 ஓய்வு விடுமுறையின் 45 நாட்களுக்கு பதிலாக மருத்துவ விடுமுறை உரிமையும் வழங்கப்பட்டுள்ளது. நிறைவேற்று தர உத்தியோகத்தர்களுக்கு 58 நாட்கள் விடுமுறை வழங்கப்பட்டதுடன் இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் நடைமுறை விதிகளுக்கான அங்கீகரிக்கப்படாத கையேட்டின் பிரகாரம் ஒரு வருடத்திற்கு ஏனைய தர உத்தியோகத்தர்களுக்கு 53 நாட்கள் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. | நடவடிக்கைகளை எடுப்பதற்கு தாபன விதிக்கோவையின் வழிகாட்டல்களுக்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (iii) | XV ஆம் அத்தியாயத்தின் 4.7 ஆம் பிரிவு | கல்வி நடவடிக்கைகளுக்காக சம்பளத்துடன் கூடிய விடுமுறை எடுத்ததன் பின்னர் பிணைமுறி நிபந்தனைகளை மீறிய 05 உத்தியோகத்தர்களிடமிருந்து 01 முதல் 33 வருட காலத்திற்கு சபைக்கு பெறப்பட வேண்டியிருந்த ரூபா 4,256,552 தொகை 2024 யூலை 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிபந்தனைகளை மீறிய உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 729,047 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் இருவர் செலுத்த வேண்டிய தொகையை தவணை முறையில் செலுத்த ஏற்பாடு செய்துள்ளனர். இரண்டு உத்தியோகத்தர்களின் மீதியில் சிக்கல் நிறைந்த சூழ்நிலை இருப்பதால், நிறுவன கணக்காய்வு முகாமைத்துவக் குழுவிற்கு அறிக்கையிட்டு மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கும் எதிர்கால நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பிணைமுறி நிபந்தனைகளை மீறிய உத்தியோகத்தர்கள் அல்லது அவர்களின் உத்தரவாததாரர்களிடம் இருந்து உரிய பணம் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச | 2018 முதல் 2022 வரையிலான ஒப்பந்தங்களில் இருந்து | முந்தைய ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் பிடிபணம் மற்றும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 571 (3). | நிறுத்திவைக்கப்பட்ட ரூபா 3,086,087 தொகை மற்றும் திருப்பிச் செலுத்தும் விதிமுறைகளில் கேள்விகளுக்காக பெறப்பட்ட ரூபா 1,227,700 வைப்புக்கள் ஆகியவற்றை திரும்பப்பெறவோ அல்லது நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் வருமானத்திற்கு செலவு வைக்கவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வைப்புக்களிற்குள் திரும்பப்பெற முடியாது என்று உறுதிசெய்யப்பட்ட தொகைகள் சீராக்கப்பட்டுள்ளன, மீதமுள்ள மீதிகள் சரிபார்க்கப்பட்டவுடன் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். | கேள்வி வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்டவாறு நி.பி. 371(5) | கொடுக்கப்பட்ட பணிகள் பூர்த்தியடைந்து 10 நாட்களுக்குள் உப கட்டுநிதிகள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் சபை 2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 544,200 கூட்டுமொத்தமான 39 செயல்நிமித்த உப கட்டுநிதிகளின் தீர்ப்பனவு 14 மற்றும் 68 நாட்களுக்கு இடைப்பட்ட காலத்திற்கு தாமதமடைந்திருந்தது. | எதிர்காலத்தில் பெரும்பாலான முற்பணங்களின் தாமதத் தீர்ப்பனவை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தொடர்புடைய நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் முற்பணங்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய திறைசேரி செயலாளரின் 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வெளியிடப்பட்ட கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டல் | அமைப்பின் நோக்கங்கள், உத்திகள், செயற்பாடுகள், மாதாந்த இலக்குகள் மற்றும் பொறுப்பான உத்தியோகத்தர்கள் 2023 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் மனித வள அபிவிருத்தி திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சினால் வழங்கப்படும் மாதிரியின் அடிப்படையில் இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் ஒவ்வொரு வருடமும் செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் முறையான மனிதவள அபிவிருத்தி திட்டத்தை தயாரித்து அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையில் உள்ள தகவல்களைச் சேர்த்து செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும், மேலும் மனித வளத் திட்டமும் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2023 செப்தெம்பர் 27 ஆம் திகதிய பிஈடி 01/2021 (iii) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | அனைத்து பொது நிறுவனங்களும் அந்த நிறுவனத்திற்கு பொருந்தக்கூடிய நிர்வாக மற்றும் நிதி கையேடுகளை தயாரித்து பொது முயற்சிகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தை பெற வேண்டிய போதிலும் இறப்பர் ஆராய்ச்சி சபையின் நடைமுறை விதிகளின் கையேடு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. குறித்த கையேட்டின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. | தற்போது பயன்படுத்தப்படும் நடைமுறை விதிகளின் கையேட்டிற்கு நிறுவனம் அங்கீகாரத்தை பெறாததால், பணிப்பாளர் சபைக்கு தகவல் அறிக்கையிடப்பட்டு, அதன் பிரகாரம், வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் தாபன விதிக்கோவையின் பிரகாரம் செயற்பட எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடைமுறை விதிகளின் கையேட்டிற்கு அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஊ) | 2009 யூன் 17 ஆம் திகதிய 09/2009 (1) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | நிறுவனங்களின் தலைவர்கள் உட்பட அனைத்து அரசாங்க ஊழியர்களும் கைவிரல் அடையாள இயந்திரங்கள் மூலம் தங்கள் வருகை மற்றும் புறப்படுதல்களை உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் இறப்பர் ஆராய்ச்சி சபையின் 51 உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் புறப்படுதல்கள் கைவிரல் அடையாள இயந்திரங்கள் மூலம் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தில் உள்ள சில உத்தியோகத்தர்களின் கைவிரல் அடையாளம் இயந்திரம் மூலம் நிராகரிக்கப்படுவதால் அந்த உத்தியோகத்தர்கள் தனி ஆவணத்தில் கையெழுத்திடும் முறை தற்போது உள்ளது. எனினும், கைவிரல் அடையாள இயந்திரத்தை வழங்கிய நிறுவனத்துடன் கலந்தாலோசித்து முறையான அமைப்பு தயாரிக்கப்படும். | அனைத்து பதவியணியினரின் வருகை மற்றும் புறப்படுதல்கள் கைவிரல் அடையாள இயந்திரத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். |
| (எ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| | (i) 3.1 ஆம் பந்தி | ஒவ்வொரு எரிபொருள் சோதனையின் பின்னர் 12 மாதங்களுக்குப் பின்னர் அல்லது 25,000 கி.மீ தூரம் ஓடிய பின்னர் அல்லது இயந்திரத்தின் பெரிய மாற்றத்திற்குப் பின்னர் | சபையில் பயன்படுத்தப்படும் வாகனங்கள் தொடர்பான எரிபொருள் நுகர்வு சோதனைகளை அதில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் | வாகனங்களில் எரிபொருள் நுகர்வு சோதனைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எது முதலில் நிகழுகின்றதோ அதன் பின்னர் மீண்டும் எரிபொருள் சோதனை செய்யப்பட வேண்டிய போதிலும் சபையில் உள்ள 08 வாகனங்கள் தொடர்பாக அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரகாரம் மேற்கொள்வதற்கு வதிவிடப் பொறியியலாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | |
| | (ii) 3.3 ஆம் பந்தி | சபையினால் எரிபொருள் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட 39 வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கையின் மாதிரி வடிவத்தில் பதிவேடுகளை பராமரிக்கத் தவறியதன் காரணமாக, எரிபொருள் பரீட்சிப்பு திகதியிலிருந்து பயன்படுத்தப்பட்ட எரிபொருளின் அளவுகள் மற்றும் கடந்த மாதத்தில் பயன்படுத்தப்பட்ட எரிபொருளின் அளவுகளில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்க முடியாதுள்ளது. | எரிபொருள் சோதனை நடாத்தப்பட்ட திகதிலிருந்து பயன்படுத்தப்பட்ட எரிபொருளின் அளவு மற்றும் கடந்த மாதத்தில் பயன்படுத்தப்பட்ட எரிபொருளின் அளவு ஆகியவற்றில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதை சரிபார்க்கும் வகையில், தொடர்புடைய தகவல்களை பேணுவதற்கு வதிவிடப் பொறியியலாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவு, | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமானது, விரும்பிய விளைவை அடைந்துகொள்வதற்கு, பதவியணியினரில் ஒவ்வொரு உத்தியோகத்தரிற்கும் குறிப்பிட்ட பொறுப்புக்களை வழங்க வேண்டிய போதிலும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவன உத்தியோகத்தர்களிற்காக முறையான பணிப் பட்டியலை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெரும்பாலான பணிகள் திணைக்கள பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், பணிகள் வழங்கப்படாத பிரிவுகளுக்கு உடனடியாக பணிகளை வழங்குவதற்கும், நிறுவனத்தில் உள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை சீர் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | பதவியணியினரில் ஒவ்வொரு உத்தியோகத்தரிற்கும் தனித்தனி பணிப் பட்டியல் கொடுக்கப்பட வேண்டும். |

## 1.8 காசு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை வங்கி அகலவத்தை கிளையில் பேணப்பட்டிருந்த ரூபா 3,000,000 நிலையான வைப்பு நிறுவனத்தின் பெயரைப் பயன்படுத்தாமல் தோட்ட அத்தியட்சகர் என்ற பெயரில் பேணப்பட்டு வந்தது. | வைப்பை மீள முதலீடு செய்வதில் டார்டன்பீல்ட் தோட்ட நிலையான வைப்புக் கணக்கின் பெயரை இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் என்ற பெயரில் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான வைப்புக்கள் நிறுவனத்தின் பெயரில் வைத்திருக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 70,609,994 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 6,367,158 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 76,977,152 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. ஏனைய செலவினங்கள் ரூபா 15,122,498 ஆலும் பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு செலவினங்கள் ரூபா 43,880,177 ஆலும் அதிகரித்தமை என்பன இவ் வீழ்ச்சிக்கு பிரதானமாக பங்களித்திருந்தன.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

| விடயம் | மீளாய்வாண்டு | முன்னைய ஆண்டு | முன்னைய ஆண்டுடனான வேறுபாடு | வேறுபாட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | சதவீதம் |
| அரசாங்க மானியங்கள் | 512,367,455 | 394,650,000 | 117,717,455 | 30 |
| ஏனைய வருமானம் | 47,534,038 | 21,242,083 | 26,291,955 | 124 |
| பிற்போடப்பட்ட வருமானம் | - | 174,271,891 | (174,271,891) | 100 |
| தோட்ட வருமானம் | 117,584,111 | 133,143,628 | (15,559,517) | 12 |
| சம்பளம், கூலிகள் மற்றும் ஊழியர் நலன்கள் | 354,446,535 | 394,187,004 | 39,740,469 | 10 |
| விநியோக மற்றும் நுகர்வு கிரயங்கள் | 41,862,017 | 29,029,011 | (12,833,006) | 44 |
| பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு செலவினங்கள் | 163,536,107 | 119,655,930 | (43,880,177) | 37 |
| ஏனைய செலவினங்கள் | 131,018,063 | 115,895,565 | (15,122,498) | 13 |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டில், நடைமுறை சொத்து விகிதம் மற்றும் விரைவுச் சொத்து விகிதம் என்பன முறையே 5:1 மற்றும் 4:1 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் அவ் விகிதங்கள் முறையே 5:1 மற்றும் 5:1 ஆக இருந்தன.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இறப்பர் ஆராய்ச்சி சபையால் நடாத்தப்பட்ட ஆராய்ச்சிகள் பற்றிய விரிவான தகவல்களைக் கொண்ட பிரதான ஆராய்ச்சி பதிவேடு சபையால் பேணப்பட்டிருக்கவில்லை. | இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தால் நடாத்தப்பட்ட அனைத்து ஆராய்ச்சி முடிவுகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், மதிப்பீடுகள், காப்புரிமைகள் போன்றவற்றின் விரிவான தகவல்கள் வருடாந்த மதிப்பாய்வில் சுருக்கப்பட்டுள்ளன, மேலும் இது இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த வெளியீடாக இருப்பதால், இது இறப்பர் ஆராய்ச்சி சபையின் ஒரு ஆராய்ச்சி மதிப்பாய்வாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. | இறப்பர் ஆராய்ச்சி சபையால் மேற்கொள்ளப்படும் முக்கிய ஆராய்ச்சிகள் உள்ளடங்கிய பதிவேடு பேணப்பட வேண்டும். |
| (ஆ) | இறப்பர் தொழில்துறை தொடர்பான தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் அளிக்கும் முறைப்பாடுகள் தொடர்பாக சபை முறையான பதிவேட்டை பேணியிருக்காததால், கணக்காய்வின் போது முறைப்பாடுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிய முடியவில்லை. | முறைப்பாடுகள் இதுவரை உரிய பிரிவுகளால் தனித்தனியாகப் பேணப்பட்டு வந்தன, இது தொடர்பான சுருக்கமான அறிக்கைக் கோவை உரிய பிரதிப் பணிப்பாளர்களின் கீழ் பேணப்படும். | முறைப்பாடுகள் தொடர்பான பதிவேடு பேணப்பட வேண்டும். |
| (இ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபை வைத்திருக்கும் ரூபா 5,285,109,496 நிலையான சொத்துக்களுக்கு நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் நிலையான சொத்துக்கள் பதிவேடு தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது, பூர்த்தியடைந்ததும் உடனடியாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையக்கப்பட்டு பேணப்பட வேண்டும். |
| (ஈ) | பொதுத் தனியார் பங்குடமையின் மூலம் வணிக மாதிரியாக இறப்பர் தயாரிப்புகளின் செயலாற்றலை வடிவமைத்து மதிப்பிடுவதற்காக ரூபா 49.7 மில்லியன் கிரயத்தில் தொடங்கப்பட்ட வரையறுக்கப்பட்ட உறுப்பு பகுப்பாய்வு மற்றும் உருவகப்படுத்துதல் நிலையத்தின் (FEAS CENTER) நடவடிக்கைகள் 2023 ஒக்தோபர் மாதத்திலிருந்து முற்றிலுமாக நிறுத்தப்பட்டதால் ரூபா | 2018.08.23 இல் இறப்பர் ஆராய்ச்சி சபைக்கும் பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவனத்திற்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தின் மூலம் இந்த வரையறுக்கப்பட்ட உறுப்பு பகுப்பாய்வு மற்றும் உருவகப்படுத்துதல் நிலையத்தின் முழு செயற்பாடும் அந்த நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் | பொது மற்றும் தனியார் பங்குதாரர்களுக்கு இடையே செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் நிறுவனத்தின் செயற்பாடுகள் முறையாக திட்டமிடப்பட்டு முறையான ஆய்வுடன் அமுல்ப்படுத்தப்பட |

| | | | |
|---|---|---|---|
| | 38,918,694 கிரயமான தொடர்புடைய கட்டிடம் மற்றும் அனைத்து கணனிகள் மற்றும் மென்பொருள், இயந்திரங்கள், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் விளைவற்றிருந்தன. அதன் பிரகாரம், நிலையத்தை நிறுவுவதற்கான நோக்கங்களாக இருந்த இலங்கையில் இயற்கை மற்றும் செயற்கை இறப்பருக்கு பெறுமதி சேர்ப்பதற்காகவும், இலக்கு சந்தையில் திறம்பட போட்டியிடுவதற்கும் மற்றும் பிராந்தியத்திற்கான FEAS சேவை வழங்கலில் சிறந்த மையமாக மாறுவதற்கும் இறப்பர் உற்பத்திகளின் வடிவமைப்பு மற்றும் உருவகப்படுத்துதலுக்கு FEAS ஐப் பயன்படுத்துவதற்குத் தேவையான திறன்களின் வளர்ச்சியை அடைந்துகொள்ள முடியாதுள்ளது. | நிறுவனம் அன்றிலிருந்து 2023 ஒக்தோபர் வரை இறப்பர் வேலைகளை செயற்படுத்தியது, 2023 ஒக்தோபரில் மென்பொருளில் ஏற்பட்ட பிரச்சனையால் அதன் பணிகள் நிறுத்தப்பட்டு, மென்பொருள் வழங்குநர்களுக்கு இது பற்றித் தெரிவித்து, 2024 சனவரி முதல் மீட்டெடுக்கப்பட்டது. எனினும், 2024.08.10 முதல் இந்த நிலையத்தின் நிர்வாகத்திலிருந்து பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவனம் வெளியேறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் இறப்பர் ஆராய்ச்சி சபை உறுப்பினர்கள், பிளாஸ்டிக் இறப்பர் நிறுவனத்தின் அதிகாரிகள் மற்றும் இலங்கை இறப்பர் மற்றும் இறப்பர் பொருட்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் பிரதிநிதிகள் உள்ளடங்கிய குழு ஒன்று கூடி இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளது. அதன்படி, இந்த நிலையத்தை மீண்டும் செயற்படுத்துவதற்கான ஒரு கூட்டு முன்மொழிவாக ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பிதழ்களை வழங்குவதன் மூலம் இந்த செயற்திட்டத்தை மற்றொரு தொழில்முறை நிறுவனத்துடன் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் அமைச்சுடன் கலந்துரையாடப்பட்டு, இறப்பர் ஆராய்ச்சி சபையின் அங்கீகாரத்துடன் அமுல்ப்படுத்தப்படும். | வேண்டும். |
| (உ) | நிறுவனத்திடம் மரப்பால் கொண்டு செல்வதற்கு ஏற்ற மகேந்திரா வகை கெப் வண்டி இருந்தாலும், அந்த வாகனத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, 2021 ஆம் ஆண்டு முதல் வாடகைக்கு ஒரு வாகனம் பயன்படுத்தப்பட்டது, மேலும் | LC–6743 கெப் வண்டியின் பராமரிப்புச் செலவு அதிகம் என்று தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தெரிவித்திருப்பதால், வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வாகனத்தைப் பயன்படுத்துவது செலவு குறைந்ததாகும், எனவே 2023 திசெம்பர் 31 | இறப்பர் ஆராய்ச்சி சபையின் பணிகளுக்கு நிறுவனத்தின் வாகனங்கள் செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அந்த வாகனத்திற்காக 2023 ஆம் ஆண்டில் சபை ரூபா 1,825,520 செலவிட்டுள்ளது. இதேபோல், சபைக்கு சொந்தமான கெப் வண்டி 2023 ஆம் ஆண்டில் ஓடப்பட்டிருக்காததுடன் வாகனம் பழுதுபார்க்க அனுப்பப்படாமல் ஆண்டு முழுவதும் பயன்படுத்தப்படாமல் இருந்தது. 2024 ஆம் ஆண்டில் இதே வாடகை வாகனம் மூலம் மரப்பால் போக்குவரத்து செய்யப்படுகிறது. | வரை மரப்பால் கொண்டு செல்லப்பட்டது. இருப்பினும், செலவு பகுப்பாய்வு அறிக்கை கணக்காய்வு விசாரணையில் சுட்டிக்காட்டப்பட்ட உண்மைகளின் அடிப்படையில் போக்குவரத்து அதிகாரியிடம் இருந்து அழைக்கப்பட்டுள்ளது. அறிக்கை வரும் வரை மரப்பால் போக்குவரத்து ஒப்பந்தம் 2 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. அறிக்கையின் உண்மைகளின் அடிப்படையில் நிறுவனத்தின் வாகனத்தைப் பயன்படுத்துவதற்கு அல்லது வாடகை அடிப்படையில் வாகனத்தைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஊ) | மொனராகலை குமாரவத்தை மற்றும் அளவ்வ நாரம்பொலவத்தை தோட்டங்கள் 2024 யூலை 03 வரையிலும் இறப்பர் ஆராய்ச்சி சபைக்கு கையகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மொனராகலை குமாரவத்தை மற்றும் அளவ்வ நாரம்பொலவத்தை தோட்டங்களை கையகப்படுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். | காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019-2020 காலத்தில் தோன்றிய இலை உதிர்வு நோய் தொடர்பான தொற்றுநோயியல் ஆய்வுகள் மற்றும் உயிரியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு. மற்றும் திறமையான நோய் முகாமைத்துவ முறைகளை மேம்படுத்துவதற்கு இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 10,000,000, ரூபா 8,000,000 மற்றும் ரூபா 13,740,000 ஐ பயன்படுத்தியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் பூச்சி இலைப்புள்ளி நோய் 11,482.59 ஹெக்டெயருக்கு பரவியிருந்தது. | பெறப்பட்ட அனைத்து நிதியையும் உரிய செயற்திட்டங்களுக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பூச்சி இலைப்புள்ளி நோயைக் கட்டுப்படுத்துவதற்காக பெறப்படும் பணத்தை திறம்பட பயன்படுத்தி நோய் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்புடன் | இந்த செயற்திட்டத்திற்கு செலுத்த வேண்டிய மீதி தொடர்பாக அமைச்சர்கள் | ஒப்பந்தப் பணிகளை உரிய காலத்திற்குள் நிறைவேற்றுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தம் செய்து கொண்டதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படவிருந்த சிறு இறப்பர் நில உரிமையாளர்களுக்கான உயிரி எரிபொருள் மர இனங்களை அறிமுகப்படுத்தும் முன்னோடி செயற்திட்டம் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்படாததால், அந்த நோக்கத்திற்காக பெறப்பட்ட ரூபா 10,457,200 தொகையில் 2023 திசெம்பர் 31 வரையிலும் 40 சதவீதத்திற்கு சமமான ரூபா 4,283,644 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | மட்டத்தில் தற்போது விசாரணை நடைபெற்று வருவதால், நடவடிக்கைக்குப் பின்னர் வழங்கப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தாவர நோயியல் மற்றும் நுண்ணுயிரியல் பிரிவின் கீழ் சிறிய அளவிலான குடிசைத் தொழில்களை ஊக்குவிப்பதற்காக தேசிய சேகரிப்பை பராமரிக்க 100 வகையான நுண்ணுயிரிகளை (கலாச்சாரங்கள்) அடையாளம் காண திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 30 கலாச்சாரங்களுக்கு மாத்திரம் ஒதுக்கப்பட்ட ரூபா 520,000 தொகையில் 80 சதவீதத்திற்கு சமமான ரூபா 420,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. | சிறிய அளவிலான குடிசைத் தொழில்களுக்கு 30 முக்கியமான நுண்ணுயிர் இனங்கள் மாத்திரமே அடையாளம் காணப்பட்டுள்ள போதிலும் 30 ஐத் தெரிவுசெய்வதற்கு சுமார் 150 தாவரங்களை ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. | திட்டமிட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், சபையின் ஆலோசனை சேவைகள் பிரிவினால் பெருந்தோட்டத் துறைக்கு 02 மாதிரித் தெளிவுபடுத்தல்கள், 02 மழை தங்குமிட செயல்விளக்கக் காணித்துண்டுகள் மற்றும் 02 ஊடுபயிர் செயல்விளக்கக் காணித்துண்டுகள் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த பணிகள் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | **மாதிரி தெளிவுபடுத்தல்களை நிறுவுதல் –**<br><br>தோட்டப் பிரிவின் உற்பத்தித்திறனை அதிகரிக்க இது ஒரு புதிய வியாபாரமாக 2023 இல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்தில் ஆர்வத்தை வெளிப்படுத்திய தோட்டக் கம்பனிகள் இது தொடர்பான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தத் தயங்கியதால் முன்னேற்றமும் நிராகரிக்கப்பட்டது. இந்த செயற்திட்டத்தை மீண்டும் 2024 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்த தோட்ட கம்பனிகளின் உயர் முகாமைத்துவத்துடன் மீண்டும் கலந்துரையாடப்படும். | குறிப்பிட்ட காலத்திற்குள் திட்டமிட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**மழை தங்குமிட செயல்விளக்க காணித்துண்டுகளை நிறுவுதல் -**

கடந்த ஆண்டு மழை தங்குமிடங்களை நிறுவுவதற்குத் தேவையான மூலப்பொருட்களின் விலை அதிகரித்த நிலையில், புதிய மழைத் தங்குமிடங்களை நிறுவுவதற்கு தோட்ட கம்பனிகள் தயக்கம் காட்டுவது மந்தமான முன்னேற்றத்தை ஏற்படுத்தியது.

**ஊடுபயிர் செயல்விளக்க காணித்துண்டுகளை நிறுவுதல்**

பெருந்தோட்டத் துறையில் புதிதாகப் பயிரிடப்படும் நிலங்களின் பரப்பளவு குறைவடைந்துள்ளமை இந்த முன்னேற்றத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாகியுள்ளது.

### 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| டயர் நிலையத்திற்குச் சொந்தமான 2020 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ரூபா 20,034,200 Gas Chromatography-Mass Spectrometry (GC-MS) உபகரணம் மற்றும் ரூபா 15,950,000 ICP-OES உபகரணம் என்பன கடந்த ஆண்டுகளில் ஒரு சில சந்தர்ப்பங்களில் மாதிரிகள் சோதனைக்கு பயன்படுத்தப்பட்டதுடன் நிறுவனத்திலிருந்து உபகரணங்களை இயக்கும் ஆராய்ச்சி பணியாளர்கள் வெளியேறியதால், உபகரணங்கள் குறைவாகவே பயன்படுத்தப்பட்டன. அதன் பிரகாரம் இந்த 02 உபகரணங்களை கொள்வனவு செய்வதன் மூலம் எதிர்பார்த்த இலக்குகளை அடைய முடியாமல் போனதுடன், கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட ரூபா 35,984,200 தொகை போதுமான அளவு | இந்த இரண்டு உபகரணங்களையும் கொள்வனவு செய்ததன் நோக்கம், இறப்பர் மற்றும் இறப்பர் தயாரிப்புக்களின் (கன உலோக அயனிகள் மற்றும் பாலியரோமடிக் கலவைகள், முதலியன) கலவையை சரிபார்த்து, உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்கு உயர்தர இறப்பர் தயாரிப்புக்களை தயாரிப்பதில் தேவையான ஆராய்ச்சி மற்றும் சேவைகளை வழங்குவதாகும். இந்த சேவைகளை வழங்குவதில், இலங்கை தொழில்துறையினர் வெளிநாடுகளுக்கு இந்த சேவைகளை அனுப்புவதில் ஏற்படும் அதிக செலவு மற்றும் தாமதத்தை தவிர்ப்பது, அதற்கான குறைந்தபட்ச கட்டணத்தை அறவிடுவதும் இந்த உபகரணங்களை கொள்வனவு செய்ததன் நோக்கமாகும். எனவே, கொள்வனவு செய்ததன் | கொள்வனவு செய்த உபகரணங்களை திட்டமிட்டவாறு அதிகபட்ச செயற்திறனுடன் பயன்படுத்த வேண்டும். |

| | |
|---|---|
| பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நோக்கம் வருமானத்தை ஈட்டுவது அல்ல, ஆனால் ஆராய்ச்சி சேவைகளை வழங்குவதாகும். எனினும், 2021 மற்றும் 2022 இல் எதிர்பாராத உலகளாவிய மற்றும் உள்நாட்டு ஸ்திரமின்மை மற்றும் ஆராய்ச்சி அதிகாரிகள் இந்த உபகரணங்களை இயக்குவதை விட்டு வெளியேறியதால், இந்த இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளன என்பது இணங்கப்படுகிறது. மேலும் அந்த சூழ்நிலையிலிருந்து விடுபட்டு நிறுவனத்தின் தற்போதைய நிதியேற்பாடுகளின் அடிப்படையில் அந்த பயன்பாட்டை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபையின் பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவி 04 வருடங்களுக்கும் மேலாக வெற்றிடமாக உள்ளதுடன், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் இல்லாத கனிஷ்ட உதவி கள உத்தியோகத்தர் மற்றும் பொதுப் பணியாளர் பதவிகளுக்கு 26 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்தவுடன் பிரதி பணிப்பாளர் (நிர்வாகம்) பதவி நிரப்பப்படும்.<br><br>தோட்டப் பிரிவின் சேவைத் தேவையின் அடிப்படையில் Check roll ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன், அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. அதேபோல், சம்பாதித்த பணம், அத்தகைய ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க பயன்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், தோட்டப் பிரிவினால் பெறப்பட்ட ஊழியர்களின் சேவைகளை நிறுவனத்தின் தேவைகளுக்காக பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரமே ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தில் ஆராய்ச்சிக்காக நேரடியாகப் பணிபுரியும் 12 பிரிவுகளில், 05 பிரிவுகளின் தலைவர் பதவிகள் 04 மாதங்கள் முதல் 33 வருடங்கள் வரை வெற்றிடமாக இருந்ததால், அதற்காக பதிற்கடமை அடிப்படையில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். | 2024.02.28 இல் நடைபெற்ற இரண்டாவது சபைக் கூட்டத்திற்கு இந்த ஆட்சேர்ப்பு தொடர்பான பணிப்பாளர் சபைக்கான ஒரு விஞ்ஞாபனம் அனுப்பப்பட்டுள்ளது. இதற்கான முறையான அங்கீகாரம் கிடைக்கும் வரை அன்றாட பணிகளை மேற்கொள்வதற்கு பதிறகடமை அடிப்படையில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். | சபையில் அத்தியாவசிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்களை விரைவுபடுத்த வேண்டும். |
| (இ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெறாமல் நிறுவனத்தின் பிரதான கடமைகளுக்காக தினக்கூலி பணியாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் 32 ஊழியர்கள் 02 மாதங்கள் முதல் 22 வருடங்கள் வரையில் பணிபுரிகின்றனர். | check roll ஊழியர்கள் தோட்டப் பிரிவில் சேவைத் தேவையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்றனர். மேலும் அவர்களின் அனைத்து வேலைகளும் தோட்ட பிரிவால் மேற்கொள்ளப்படுகின்றன, மேலும் தோட்டப் பிரிவைச் சேர்ந்த ஊழியர்கள் அவசியமான சந்தர்ப்பங்களில் மாத்திரமே நிறுவனத்திற்குள் அழைத்துச் செல்லப்படுகிறார்கள். | முறையான அங்கிகாரத்தின் அடிப்படையில் மாத்திரமே ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | செயற்திட்ட உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அல்லது வரிசை அமைச்சுக்களின் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மாத்திரமே ஒரு செய்தித்தாள் விளம்பரம் வெளியிடப்பட்டிருந்தது, குருவிட்ட உப நிலையத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் இல்லாத பதவியொன்றாகும். மேலும் அதற்காக ரூபா 47,092 செலவிடப்பட்டுள்ளது. | தேசிய இயற்கை இறப்பர் உற்பத்தித்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இறப்பர் உற்பத்தியை 70,000 முதல் 100,000 மெற்றிக் தொண்களாக அதிகரிப்பதற்காக முறையான தோட்ட முகாமைத்துவ உத்திகளின் கீழ் குருவிட்ட உப நிலையத்தை பராமரிப்பதற்கு தோட்ட முகாமைத்துவக் குழுவில் தீர்மானிக்கப்பட்டது. இதன் கீழ் கடமையாற்றிய குருவிட்ட தோட்ட முகாமையாளர் ஓய்வு பெற்றதன் பின்னர் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் இதற்கான ஆட்சேர்ப்புக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் தகுதியான அதிகாரிகள் விண்ணப்பித்திருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரமே ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். |

அதேபோல், தோட்ட முகாமையாளரை பணிக்கமர்த்துவதற்கு தற்போது அங்கீகாரம் கிடைத்திருக்காததால், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில், தற்காலிக அடிப்படையில் செயற்திட்ட உத்தியோகத்தர் ஒருவரை பணிக்கமர்த்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.